# முகத்தில் பருவை நீக்கி பொலிவு புத்துணர்வுடன் திகழ காஸ்மோ டெர்மா புதிய 'மாஸ்க்' அறிமுகம்

சென்னை, செப் 13–

முகப்பரு என்பது பெரும்பான்மையான மக்கள் எதிர்கொள்ளும் ஒரு தொடர்ச்சியான பிரச்சனை ஆகும். முக சருமத்தில் கறைகள், கரும்புள்ளிகள், வடுக்கள் போன்ற பிற பிரச்சினைகளைக் கொண்டு வருகிறது.

காஸ்மோ டெர்மா நிறுவனம் காஸ்மோ பியூரிட்டி மாஸ்க் முகப்பரு சம்பந்தப்பட்டவை அனைத்திற்கும் ஒரே தீர்வு ஆகும். அதை உங்கள் முகத்தில் ஒரு முகமூடியாக அல்லது ஒரு இடத்திலுள்ள முகப்பருவை குணப்படுத்த பயன்படுத்துங்கள். அதை முதுகு, தோள்பட்டை பகுதிகளிலும் மயிர்க்கால் அழற்சிக்கும் பயன்படுத்த முடியும். இது குறிப்பாக முகப்பரு பாதிப்பை குணப்படுத்தும். மேலும் தோலியல் ரீதியாக பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த மாஸ்க் வறண்ட சருமத்தை குணப்படுத்துமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது காவோலின் மற்றும் கேலமைன் போன்ற பொருட்களைக் கொண்டது. இது முகப்பரு காரணமாக ஏற்படும் எந்த விதமான அழற்சியையும் ஆற்ற உதவும். இது டிரிக்ளோஸன் மற்றும் வேம்பு ஆகியவற்றையும் உள்ளடக்கி இருப்பதால், அது தோலுக்கு சிறந்த ஒரு பாக்டீரியா எதிர்ப்பு வேலையை செய்கிறது. வைட்டமின்–இ தோலுக்கு ஈரப்பதத்தையும் ஊட்டச்சத்தையும் அளிக்கிறது. அதிலுள்ள புதினா, ரோஸ்மேரி, இனிப்புப் பாதாம் ஆகியவை இயற்கையாகவே இதமானதாகவும் அழற்சி எதிர்ப்பாகவும் இருக்கின்றன.

"காஸ்மோ பியூரிட்டி மாஸ்க்" காஸ்மோ டெர்மா கிளினிக், பெங்களூரு மற்றும் சென்னையில் ஒப்பனைப் பொருட்கள் தோலியல் மற்றும் தோல் பராமரிப்பில் முன்னோடி ஆவர். இந்த கிளினிக் 2006ம் ஆண்டு சர்வதேச புகழ் பெற்ற பிரபல ஒப்பனைத் தோல் மருத்துவர் டாக்டர். சித்ரா வி ஆனந்தால் நிறுவப்பட்டது. தோல், முடி மற்றும் உடல் சுகாதாரப் பராமரிப்பில் ஒரு பாதுகாப்பான, திறம்பட்ட, நியாயமான செயல் முறையில், ஈடில்லா அனுபவத்தை வழங்குவோரில் முன்னணியில் இருப்பதே காஸ்மோடெர்மாவின் முன்னோக்கு ஆகும்.